## தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2016

-----------------------------------------------------------

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 55 ஆம் இலக்க தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 36(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் பா 79,737,220 கிரயத்திலான 15 நிலையான சொத்து உருப்படிகள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,148,299 ஆன கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 4,521,733 என நிதி நிலைமைக் கூற்றிலும் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் மே 05 ஆந் திகதி ரூபா 1,200,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆய்வுகூட உபகரணங்களுக்கு பயன்படுத்தப்படும் உபபாகங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டில் ரூபா 549,279,345 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்கள் தொடர்பில் அவற்றுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 524,363,994 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகூட உபகரணங்கள் கருவிகள் மற்றும் தளபாடங்கள் | 24,915,351 | இருப்பினை உறுதிப்படுத்தும் சான்றுகள் |
| | | 549,279,345 | |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் ாபன விதிக்கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103 | * மெய்மையாய்வு சபையினால் காணாமல் போனதாக (Untraceable) இணங்காணப்பட்டுள்ள ரூபா 4,772,606 பெறுமதியான 143 உருப்படிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>* 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையாக இணங்காணப்பட்ட 809 புத்தகக் குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 135 | மீளாய்வாண்டின் போது தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தினால் ரூபா 358,285,716 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 137 | ரூபா 12,881,992 பெறுமதியான 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டக்கள்அங்கீகாரம் இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 139 | மீளாய்வாண்டில் ரூபா 429,652 பெறுமதியான 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பிரதிக் கணக்காளரின் சான்றுறுதிப்படுத்தல் இல்லாமல் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (v) | நிதிப்பிரமாணம் 225 | பொதுவான கொடுப்பனவிற்காக பொது 35 மாதிரி பத்திரத்தில் சரியாகவும் முழுமையாக நிரப்பி தயாரிக்கப்பட வேண்டியதுடன் பொது கொடுப்பனவு உறுதிச்சீட்டில் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் என்பவற்றை உரிய உத்தியோகத்தர்களின் கையொப்பம் மற்றும் இறப்பர் இலட்சனை இட்டு உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 2715 உறுதிச் சீட்டுக்களுக்காக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 371(2) | சிறுகட்டு நிதியில் ஒரு தடவையில் ரூபா 5,000 இற்கு மேல் கொடுப்பனவு செய்யக் கூடாத போதிலும், அதற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,500 மற்றும் ரூபா 12,000 இற்கு இடைப்பட்ட வீச்சில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய பிர/நிறுவகம்/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம் | கற்கைப் படி, ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஓய்வூதிய நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பிற்கும் உரித்தாக்க முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட கல்விசார் படியை அடிப்படையாக கொண்டமையால் மேற்குறித்த நிதியங்களுக்கு நிறுவகத்தின் பங்களிப்பாக ரூபா 3,011,258 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 7,977,978 பெறுமதியான பொருட்கள் முறையற்ற விதத்தில் பாவனையிலிருந்து அகற்றி பாதுகாப்பற்ற நிறுவன வளவில் குறித்து வைக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 44.817,129 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 50,269,507 ஆகும். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,452,378 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. அதன் படி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஊழியர் ஊதியம் ரூபா 9,220,529 ஆல் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியம் ரூபா 27,000,000 ஆல் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறை ஏற்பட்டிருந்த போதிலும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொண்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 72,927,520 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 125,454,329 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1981 இன் 55 ஆம் இலக்க தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், சமூக விஞ்ஞானம் மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களில் விரிவான அர்த்தத்தை கொண்டு அவ்விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் ஒன்றுடன் பொதுவாக அடிப்படை கல்வி ஆராய்ச்சிகள் மற்றும் ஆரம்ப புலனாய்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல் மற்றும் நிலைத்திருத்தல்

- நிறுவகத்தின் கலை நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக விஞ்ஞான அறிவினை விரிவுபடுத்தும் பொருட்டு விரிவுரைகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஒழுங்கமைத்தல்

- இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளில் நிர்மாணச செயற்பாடுகளில் ஈடுபடும் விஞ்ஞானிகளுக்கு விரிவுரை நடாத்துதல் மற்றும் நிறுவகத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு சமூகமளிப்பதற்கு அழைப்பு விடுதல்

- தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பொறுப்புச்செல்வதுடன் ஏனைய நாடுகளின் விஞ்ஞான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்கள் மற்றும் விஞ்ஞான நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் பேணி செல்லலும் நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்குரிய விடயங்களுக்குரிய சர்வதேச ஒத்துழைப்பினை ஏற்படுத்துதுல்.

- நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்ளை அடைந்துகொள்வதற்கு தேவையான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்டு 30 ஆண்டுகளான காலம் கடந்திருந்ததுடன் போதிலும் நிறுவகத்தினால் 11 ஆக்கவுரிமைப் (பேடண்ட்) அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் இலங்கையில் பொருளதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அதில் ஒரு அனுமதிப்பத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் Super Phospate, Ammonium Phospate பசளை உற்பத்திக்காக முறையே 9772 மற்றும் 9773 ஆம் இலக்க பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு வரையிலும் அவை செய்முறையாக செயற்படுத்தப்படாதிருந்ததுடன் இலங்கை பசளை இறக்குமதிக்காக பாரியளவு அந்நியச் செலாவணியை செலவிடுவது அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நூலகப் புத்தகங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,591 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த உபகரணங்களை அல்லது புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையாக கையேற்கப்படாத மஹவலி அதிகாரசபைக்குரிய நிறுவகத்தின் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்படும் உததியோகபூர்வ விடுதிகளுக்காக செலுத்த வேண்டிய வீட்டு வாடகை ரூபா 160,750 தொகை குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு உரிய நிறுவனததிற்கு செலுத்தப்பட வேணடிய போதிலும் ரூபா 101,000 தொகை மீளாய்வாண்டின் நிறுவக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் நிறுவனமொன்றினால் நுழைவு வீதியில் நிர்மாண வேலைக்காக நிலத்தை தயார் செய்யும் போது டெலிகொம் கம்பனியின் கேபலொன்றுக்கு சேதம் ஏற்படுத்தியமை காரணமாக டெலிகொம் கம்பனியால் மதிப்பிடப்பட்ட நட்டமான ரூபா 658,744 தொக ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் அதனை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 நிதியக் குறைப் பயன்பாடு

மீளாய்வாண்டில் அரச மூலதன மானியமாக கிடைத்த ரூபா 144,999,579 தொகையில் ரூபா 85,975,718 ஆன மீதியொன்றும் முன்னைய ஆண்டுகளில் கிடைத்த மானியங்களில் ரூபா 45,253,912 தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் செலவிடப்படாத அரச மானியங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2015 பெப்ரரி 16 ஆந் திதி ரூபா 1,200,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட கெப் வண்டியொன்று 2016 சனவரி 21 ஆந் திகதி முதல் கணக்காய்வு திகதி வரையில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு நிறுவக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4.6 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் XI ஆம் பகுதியின் 55(ஊ) பந்தியின் பிரகாரம் அரசின் அல்லது அரை அரசின் சகல நிறுவன நிர்மாண நடவடிக்கைகளுக்காக நியமாக இனங்காணப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களையேு பயன்படுத்த வேண்டிய போதிலும், தேசிய அடிப்படை நிறுவகம் ரூபா 43,985,981 கூட்டுத்தொகையான நிர்மாண நடவடிக்கைகளுக்காக நியம மாதிரி படிவங்களைப் பயன்படுத்தாமல் முறையற்ற வகையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் கைவிடப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் தாமதமான நிர்மாணங்கள் போன்றவற்றிற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது தண்டப் பணத்தை அறவிடுவதற்கோ முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டு 04 மாத காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 சந்தர்ப்பங்களுக்காக வேலை ஆரம்ப முற்பணமாக ரூபா 13,855,793 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த ஒப்பந்தங்களின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்தங்களின் காலம் நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வேலை ஆரம்பிப்பு முற்பணங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிணை முறிகளின் காலம் கடந்திருந்ததுடன் மேலும் காணப்படும் ரூபா 13,855,793 முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டிக் கைநூலின் 7.9.2 (ஜே) பிரிவின் பிரகாரம் அதிகளவு விலை விலகலொன்றுடன் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில் ஒவ்வொரு வேலை உருப்படிக்காக ஏனைய கேள்விதாரர்களின் கூறுவிலை மற்றும் பொறியியலாளர் மதிப்பீட்டின் விலை விபரங்கள் ஒப்பிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் ரூபா 5,472,685 தொகையான பொறியியலாளர் மதிப்பீட்டுக் கிரயமான நிர்மாணம் ஒன்றிற்காக கேள்வியை மதிப்பீடு செய்யும் போது ஒவ்வொரு உருப்படிகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாத காரணத்தினால் விலை அளவீட்டுப் பத்திரத்தில் 24 ஆம் உருப்படிக்காக ஏனைய கேள்விதாரர்களின் விலை 6700 சதவீதமும் பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலைக்கு 90 சதவீதம் குறைத்தும் விலைகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் தகைமை பெற்ற பெற்ற கேள்விதாரருக்கு ரூபா 5,481,618 நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் புதிய கட்டிட நிர்மாணத்தின் போது ஆராய்ச்சி ஆய்வு கூடத்திற்காக ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் சுற்றுக் கம்பி இட்டு கொங்கிரீட் மேசைகளை நிர்மாணிப்பதற்கு 420 சதுர அடிக்கு ரூபா 4,620,420 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் அவை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான தரத்திற்கு இணங்கவில்லை எனக் குறிப்பிட்டு கொங்கிரீட் மேசைகள் உடைத்து அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக பலகையிலான (Wooden) மேசைகள் அமைத்தன் காரணமாக நிறுவகத்திற்கு கொங்கிரீட் மேசைகளை நிர்மாணிப்பதற்கு செலவான ரூபா 4,620,420 தொகை நிதிசார் நட்டமொன்றாக இருந்தது.

(உ) தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்திற்கு முன்னால் முற்றத்தில் 675 சதுர மீற்றர் ($675m^2$) நிலப் பிரதேசத்திற்கு கொங்கிரீட் கற்களை பரப்புவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 814,925 செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையில் அக்கற்கள் பரப்பிய இடத்தின் அநேகமான பகுதிகள் கீழிறங்கியிருந்ததுடன் அவ்விடங்களில் நீர் நிரம்பியிருந்தன. மேலும் அப்பிரதேசத்தில் சேரும் நீர் வழிந்தோடுவதற்கு நிலத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 பதவியணியினர் நிருவாகம்

2017 மார்ச் 09 ஆந் திகதி அளவில் ஆராய்ச்சி பதவியணியில் 20 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களாக காணப்பட்டதன் பேரில் இந்நிறுவகத்தின் நோக்கங்கங்களை சீரான மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு இடையூறுகள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 14 உருப்படிகளில் 6 சதவீதத்திலிருந்து 1684 வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ‘ |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | | (i) | மெதுவாக அசையும் இருப்புக்கள் மற்றும் விளைவற்ற இருப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | | (ii) | இரசாயன பொருட்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் பரிசோதனையொன்று ஏற்படக்கூடிய வகையில் வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஒப்பந்த நடவடிக்கைகள் | - | | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்படாமை மற்றும் முறையான மேற்பார்வையிலிருந்து விலகிச் செயற்படல். |
| (ஈ) | வாகனப் பயன்பாடு | - | | வாகன நிர்வாகம் மற்றும் வாகனத் திருத்த வேலைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் ஒரே உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் முறையான உள்ளக பரிசோதனையொன்று செயற்படுத்தப்படாமை. |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | - | | உள்ளகக் பரிசோதனையொன்று ஏற்படக்கூடிய வகையில் வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |